# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2010 ஜுன் திங்கள் 30.06.2010–ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

*முன்னிலை*

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

<u>பொருள் எண் : 1</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்குறிப்பிட்டுள்ள கடைகளின் உரிம காலம் 31.03.2010 வுடன் முடிவடைந்து விட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.ம.கு.வ) துறை அரசாணை எண்.147 நாள் 30.12.2000–ன்படி மேற்படி கடைகளுக்கான உரிம காலத்தினை 01.04.2010 முதல் 31.03.2013 முடிய மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், தற்போதைய மாத வாடகையில் 15% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | உரிமதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 01.04.2010 முதல் 31.03.2013 முடிய வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 3 | திருமதி. ஜெயமலர் | 1538 | 1769 |
| 2 | 5 | திரு.தார்ச்சீஸ் | 1282 | 1474 |
| 3 | 6 | திரு.ஷாகுல் அமீது | 1277 | 1469 |
| 4 | 7 | திரு.மிக்தாத் | 1085 | 1248 |
| 5 | 15 | திரு. ஐயப்பன் | 868 | 998 |
| 6 | 17 | திருமதி. சார்லெட் செல்வி | 596 | 685 |
| 7 | 18 | திரு. கென்னடி | 596 | 685 |
| 8 | 19 | திரு.கோவிந்தராஜ் | 548 | 630 |
| 9 | 20 | திரு. ஜெயசேகர் | 509 | 585 |
| 10 | 22 | திரு. பகர்தீன் | 509 | 585 |
| 11 | 23 | திரு. டிகால் | 596 | 685 |
| 12 | 24 | திரு. வினிஸ்டன் | 575 | 661 |
| 13 | 25 | திரு. வினிஸ்டன் | 575 | 661 |
| 14 | 26 | திரு. முருகன் | 509 | 585 |
| 15 | 27 | திரு. ஆன்றனி | 558 | 642 |

<u>அலுவலகக்குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/440/2004 )

**தீர்மானம் எண். 1348 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 2</u>

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு 16, கதவு எண். 24/14A, வரிவிதிப்பு எண்.4769–ல் செயல்பட்டு வரும் செயின்ட் ஆன்ஸ் பள்ளி கட்டிடத்திற்குள் செயல்பட்டு வரும் சிறுவர் இல்ல கட்டிடத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்படி, வரிவிலக்கு அளிக்க கேட்டு வரப்பெற்றுள்ள விண்ணப்பம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

(1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 – பகுதி –II செக்ஷன் 83–க்கு வழங்கப்பட்டுள்ள திருத்தத்தில் (Amendment) அரசு பதிவுப்பெற்ற கல்வி நிறுவனங்களில் இணைந்துள்ள விடுதிகளுக்கு வரிவிலக்கு அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) மேற்படி செயின்ட் ஆன்ஸ் பள்ளி சிறுவர் விடுதி பள்ளிக் கட்டிடத்திற்குள் எவ்வித கட்டணமும் வசூல் செய்யாமல் இலவசமாக செயல்படுவதால் சொத்து வரியிலிருந்து வரி விலக்கு அளிக்கலாம்.

(ந.க.எண்.34/2010/அ1)

**தீர்மானம் எண். 1349 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3365/2009/UPA-3 நாள் 19.05.2009 –ன்படி பொன்விழா நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் 2009–2010–ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பிரிவுகள் | தொகை |
|---|---|---|
| 1 | தனிநபர் மானியம் (USEP)<br>சுயவேலை வாய்ப்பு | ரூ.<br>1,16,635 |
| 2 | நகர்ப்புற மகளிர் சுய உதவித்திட்டம் (UWSP) | 87,476 |
| 3 | சுழல் நிதி (UWSP) | 29,159 |
| 4 | பயிற்சி (STEP UP) | 1,74,952 |
| 5 | சுயவேலை வாய்ப்பு (UWEP) | 1,16,635 |
| 6 | சமுதாய அமைப்பு (UCDN) | 58,317 |
| 7 | அலுவலக நிர்வாக செலவினம் (A & OE) | 39,278 |
| 8 | திட்ட விளம்பரம் (விழிப்புணர்வு) | 26,656 |
| | மொத்தம் | 6,49,108 |

பொன்விழா நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் புதிய வழிகாட்டுதல் நெறிகளின்படி மேற்கண்ட அலகுகளுக்கான செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – நிதி ஒதுக்கீடு வந்துள்ளதை மன்றம் பதிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்2/4740/09)

**தீர்மானம் எண். 1350 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்களை வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1177 நாள் 25.01.2010–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 26.05.2010 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

(1) Jayapaba Traders, Thazakudy : Rs. 80,174/-
(2) Shanmugaa Chenicals, Nagercoil : Rs. 84,630/-

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் Jayapaba Traders என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – (1) உத்தேச செலவுத் தொகை ரூ.90,008/– க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(2) பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.1388/2009/எச்1)

**தீர்மானம் எண். 1351 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 5

இந்நகராட்சிக்குக்குட்பட்ட கீழ்காணும் 4 இடங்களில் "குப்பை இல்லா குளச்சல் நகரம்" என்ற Flex விளம்பர பலகை வைக்கப்பட உள்ளது.

(1) இலப்பவிளை பள்ளி அருகில்
(2) புதுத்தெரு (மதனாவிளை சந்திப்பு)
(3) குளச்சல் கடை
(4) சுனாமி மண்டபம் அருகில் (கொட்டில்பாடு)

மேற்காணும் Flex விளம்பர பலகை 4 எண்ணங்கள் 3' x 2' அளவில் தயார் செய்யவும் அவற்றிற்கான இடங்களில் காங்கிரீட் அடித்தளம் அமைத்து நடுவதற்கும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.13,000/–ஆகும்.

SJSRY திட்ட UCDN பிரிவு 2009–10 –ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மீதமுள்ள ரூ.8317/– ஐ மேற்படி Flex விளம்பர பலகைகளுக்கான செலவுகளுக்கு பயன்படுத்தவும், எஞ்சியத் தொகை ரூ.4693/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/6536/08)

**தீர்மானம் எண். 1352 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. காவடிவிளை முருகன்கோவில் அருகில் மேற்படி பலகை கூடுதலாக வைப்பதற்குச் செலவாகும் தொகையாக ரூ. 3250/–க்கும் அனுமதி வழங்கிடவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

இந்நகராட்சி பகுதியில் நடத்தப்பட்ட பிளாஸ்டிக்ஸ் தவிர்ப்பு விழிப்புணர்வு தெருமுனை பிரச்சார நிகழ்ச்சிகளுக்கான செலவினத் தொகை ரூ.20,000/– மற்றும் 12.03.2010 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட பிளாஸ்டிக்ஸ் தவிர்ப்பு விழிப்புணர்வு முகாம் செலவினம் ரூ.30,000/– ஆகியவற்றை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க இந்நகர்மன்றம் தனது 11.03.2010–ம் தேதிய தீர்மான எண்கள் 1203 மற்றும் 1223 ஆகியவற்றின் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஆனால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான செலவினத்திற்காக SJSRY திட்ட UCDN பிரிவின் 2009–10–ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இந்நகராட்சிக்கு ரூ.58,317/– வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி செலவினத் தொகை ரூ.50,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை ரத்து செய்யவும், SJSRY திட்ட UCDN பிரிவு நிதியிலிருந்து ரூ.50,000/– பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> – (1) 11.03.2010–ம் தேதிய தீர்மானங்கள் 1203 மற்றும் 1223 ஆகியவற்றை ரத்து செய்யலாம்.

(2) SJSRY திட்ட UCDN பிரிவு 2009–10–ம் ஆண்டு ஒதுக்கீட்டு தொகை ரூ.58,317/– ல் ரூ.50,000/–ஐ பொது நிதிக்கு மாற்றம் செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4596/09)

**தீர்மானம் எண். 1353 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 7</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வந்த மினி லாறி TN.74.5507 கடந்த 26.04.1991 முதல் தொடர்ந்து 19 ஆண்டுகளாக இயங்கி வந்ததால் மிக மோசமாக சேதமடைந்துவிட்டதாலும், 19 ஆண்டுகளுக்கு மேல் இயங்கும் மினி லாரிகளின் பழுதுகளை சரி செய்வதற்கு அரசு நிர்ணயம் செய்துள்ள தொகைக்கு அதிகமாக செலவு செய்யப்பட்டதாலும், மேற்படி வாகனத்தை Condemn செய்வதற்கும், அதற்கு மாற்றாக 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் 2005–06 திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து புதிய மினி லாரி (Hydraulic) ஒன்று வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்புவதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1247, நாள் 30.03.2010–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி மினி லாரியானது பொது சுகாதாரப் பிரிவு பணிக்கு பயன்படுத்தப்படாமல் ஒதுக்கப்பட்டுள்ளது.

11.06.2010 அன்று நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பொது சுகாதாரப் பிரிவு கூட்டத்தில் நகரின் பொது சுகாதாரப் பணியில் தேக்கம் ஏற்படாமல் தவிர்க்க மேற்படி லாறியின் முக்கிய பழுதுகளை சரி செய்து மீண்டும் இயக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மினி லாறி TN.74.5507–ன் முக்கிய பழுதுகளை சரி செய்து மீண்டும் இயக்குவதற்கும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.34,500/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்படி வாகனத்தை Condemn செய்வதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1247 நாள் 20.03.2010 –ஐ மன்றம் ரத்து செய்யலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.7219/2008/எச்1)

**தீர்மானம் எண். 1354 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி TN.74.T.5508– ன் செல்ப் மோட்டார் மற்றும் கிளட்ச் சிலிண்டர் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2500/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1343 நாள் 28.05.2010–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 11.06.2010–ல் கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ்,<br>நாகர்கோவில். | ரூ. 2625/– |
| 2 | மணி மோட்டார் ஒர்க்ஸ்,<br>ஒழுகினசேரி, நாகர்கோவில். | ரூ. 2975/– |
| 3 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>நாகர்கோவில். | ரூ. 2450/– |

நகரின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்பவரின் விலைப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2913/09/எச்1)

**தீர்மானம் எண். 1355 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN.74.V.3530– ல் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 02.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | S.G.Jeyaraj Nadar & Son,<br>Palayamkottai. | 15.29% மதிப்பீட்டை விட அதிகம்<br>( ரூ. 9,800) |
| 2. | Kodai Cars (P) Ltd.,<br>Palayamkottai. | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>(ரூ.8.495) |

இதில் Kodai Cars (P) Ltd., என்ற நிறுவனம் (0.06%) மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ளது இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் .குறிப்பு** :

(1) இதில் கோடை கார்ஸ் நிறுவனம் 0.06% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**(2)** அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றுக் கொண்டமைக்கும மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.5030/07/இ1)

**தீர்மானம் எண். 1356 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 10

இந்நகராட்சி 8–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.P.பின்றோ அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.

இந்நகராட்சி 8–வது வார்டில் FI/87 மற்றும் FI/62 ஆகிய இரண்டு மின்கம்பங்களை நிரந்தரமாக மாற்றவும், மேலும் ஏசுதாஸ் காலனியில் FI/63 மற்றும் FI/58 ஆகிய மின்கம்பங்கள் வீடுகளையொட்டி உள்ளதாலும், ஆபத்தான நிலையில் உள்ளதாலும், வீட்டுடன் ஒட்டாமல் இருக்க நீளம் உள்ள கிளாம்ப் பொருத்தவும் கேட்டுள்ளார். இது விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3009/10/இ1)

**தீர்மானம் எண். 1357 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 11

இந்நகராட்சி 17–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.முருகன் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.

இந்நகராட்சி பகுதியிலுள்ள அரசு தொடக்கப்பள்ளிகளில் கல்வி கற்பதற்கு குழந்தைகள் இல்லாத சூழ்நிலை உருவாகி உள்ளது. எனவே அதை போக்கும் வண்ணம் அங்கன்வாடி மையங்கள் தனியாக இயங்குவதனைத் தவிர்த்து அந்தந்த அரசு தொடக்கப்பள்ளிகளில் அங்கன்வாடி மையம் இருந்தால் அதில் வரும் குழந்தைகள் அப்படியே முதல் வகுப்பில் சேரும் வாய்ப்பு உருவாகும்.

எனவே இதற்கான தீர்மானம் நிறைவேற்றி அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல கேட்டுள்ளார். இதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1358 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 12

இந்நகராட்சி 19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.வி.கோமளா அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.

(1) நெசவாளர் தெரு காந்தி ஜங்சன் பக்கம், அஜிதா மெடிக்கல்ஸ் கடை அருகில் நிற்கும் மின்கம்பம் எண். FII/34 –ல் மின் இணைப்பு கொடுத்து குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) நெசவாளர் தெரு தெற்கு வீதியில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சாலை முழுவதையும் தார்தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.4144/10/இ1)

**தீர்மானம் எண். 1359 பொருள் எண். 12–க்கான நகராட்சி பொறியாளரின் கருத்துரு கேட்டு, கருத்துருவுடன் அடுத்த சாதாரணக் கூட்டத்தில் பொருள் வைத்திட தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 ஜுன் திங்கள் 30.06.2010–ம் நாள் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது..

*முன்னிலை*

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

இந்நகராட்சியில் 6/2010–ம் மாதத்தில் செலவிடப்பட்ட வருவாய் நிதிக் கணக்கு வவுச்சர் எண். 74 முதல் 101 வரையும், குடிநீர் மற்றும் வடிகால் நிதிக் கணக்கு வவுச்சர் எண். 22 முதல் 31 வரையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 2585/09/பி1)

**தீர்மானம் எண். 1360 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 2

இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக விசயமாக மேற்கொண்ட பயணங்களுக்கான பயணப்படித் தொகை ரூ..8422/–ஐ கீழ்காணும் விவரங்களின்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.வெ.கண்ணையா | நகராட்சி பொறியாளர் | 4/2010 | 1868/– |
| 2 | திரு.பி. செல்வம் | துப்புரவு அலுவலர் | 3/2010<br>5/2010 | 822/–<br>343/– |
| 3 | திருமதி. எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 4/2010<br>5/2010 | 1034/–<br>1014/– |
| 4 | திருமதி.Y.மேரி ஜெயஷீலா | மகப்பேறு உதவியாளர் | 3/2010<br>4/2010<br>5/2010 | 389/–<br>67/–<br>134/– |
| 5 | திருமதி.J. ஸ்டார்லின் லலிதா குமாரி | சமுதாய அமைப்பாளர் | 3/2010<br>5/2010 | 1116/–<br>296/– |
| 6 | திரு.எஸ்.கணேசன் | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 3/2010 | 676/– |
| 7 | திரு.ச. ராமு | அலுவலக உதவியாளர் | 4/2010<br>5/2010 | 369/–<br>294/– |
| | | மொத்தம் | | 8422/– |

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.130/2010/எச்1)

**தீர்மானம் எண். 1361 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

இந்நகராட்சியில் E-Tender -க்கான Digital Signature Card (D.S.C.) குறைந்தது மூன்று அலுவலர்களாவது வைத்திருக்க வேண்டும் என்று நகராட்சிகளின் இணை ஆணையர் அவர்கள் பல ஆய்வுக் கூட்டங்களில் அறிவுறுத்தி உள்ளார்கள். இந்நகராட்சியில் ஆணையர் மற்றும் பொறியாளரிடம் மட்டும் தான் D.S.C. உள்ளது. எனவே இந்நகராட்சி Overseer –க்கும் D.S.C. வாங்க இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 2400/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2396/09/இ1)

**தீர்மானம் எண். 1362 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

இந்நகராட்சியில் இயங்கி வரும் Xerox மிஷின் பழுது ஏற்பட்டிருந்ததை சரி செய்ய, மிஷின் சப்ளை செய்த Sakthi Copier, திருநெல்வேலி நிறுவனத்தாரிடம் கோரியதின்பேரில், மிஷின் பழுதை சரி செய்து அதற்கான கட்டணம் ரூ. 650/– க்கு Bill வழங்கியுள்ளார்கள். மேலும் பில்லுக்கான தொகை ரூ.650/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 206/2010/பி1)

**தீர்மானம் எண். 1363 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 5

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி TN.74.Z.8931 கடந்த 15.03.2000–ல் வாங்கப்பட்டு சுமார் 48846 கிலோ மீட்டர் துாரம் ஓடி உள்ளது. தற்போது மேற்படி மினி லாறியின் டயர்கள் மிகவும் மோசமாக பழுதடைந்து உள்ளதால், பொது சுகாதாரப் பணியில் மினி லாறியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு லாறியின் 6 டயர்களையும் மாற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 39,000/–க்கு (6 x 6500) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4729/08/எச்1)

**தீர்மானம் எண். 1364 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 6

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி TN.74.Z.8931–ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.25,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1346 நாள் 28.05.2010–ன் மூலம் ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 24.06.2010 அன்று கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | KSSS .ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில். | 0.16% மதிப்பீட்டு தொகையை விட கூடுதல் |
| 2 | M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில். | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையில் 0.02% குறைவாக மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் என்பவர் கொடுத்துள்ளார். எனவே இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.4739/08/எச்1)

**தீர்மானம் எண். 1365 குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 7

இந்நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெருவில் (காவடிவிளை குளக்கரை அருகில்) கடை கட்ட SJSRY திட்ட UCDN பிரிவு 2009–10 –ம் ஆண்டு ஒதுக்கீடு தொகை ரூ.58,317/– ஐ பயன்படுத்த இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1287 நாள் 29.04.2010–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆனால் மேற்படி தொகையானது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் கடை கட்டுவதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை ரத்து செய்யவும், பொது நிதியிலிருந்து கடை கட்டும் பணியை மேற்கொள்ளவும், மேற்படி தொகை ரூ.58,317/–ல் ரூ.50,000/– பிளாஸ்டிக்ஸ் தவிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக பொது நிதியிலிருந்து வழங்கப்பட்ட செலவினத் தொகைக்கு ஈடாக பொது நிதிக்கு மாற்றம் செய்யவும், எஞ்சியுள்ள தொகை ரூ. 8,317/– ஐ இந்நகராட்சி பகுதிகளில் “குப்பை இல்லா குளச்சல் நகரம் “ என்ற விளம்பர Flex Board –கள் வைக்க பயன்படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.451/2010/இ1)

**தீர்மானம் எண். 1366 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு எண். 6 அருகில் ஒரு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அதில் இருந்து வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.2 அருகில் உள்ள பிரதான குழாயுடன் இணைக்கும் வகையில் பிரதானக் குழாய் அமைப்பதற்கும், மதிப்பீடு ரூ. 2,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1309 நாள் 24.05.2010 மூலம் பணி உத்தரவு வழங்கியுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு மின் இணைப்பு பெறுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.9400/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1844/2010/இ1)

**தீர்மானம் எண். 1367 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

அரசு ஆணை நிலை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2 ) துறை நாள் 03.06.2010 நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27332/1010/எம்3 நாள் 07.06.2010–ன்படி "தமிழ் வாழ்க" என்ற சொல் பொறித்த மின் ஒளிப்பலகை நிறுவுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.21,000/–க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(2) மேற்காணும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அவசர அவசியம் கருதி 10.06.2010 அன்று நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3031/2010/இ1)

**தீர்மானம் எண். 1368 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 10

"தமிழ் வாழ்க " என்ற சொல் பொறித்த மின் ஒளிப்பலகை நிறுவுவதற்கு அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 15.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | New Moon Neon (P) Ltd.<br>Chunkankadai. | மதிப்பீட்டு விலை விகிதம்<br>(ரூ. 21,000) |
| 2. | City Neon (P) Ltd.,<br>Nagercoil. | 16.67% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(ரூ. 24500) |

அலுவலகக்குறிப்பு –

(1) பெற.ப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள New Moon Neon (P) Ltd , Chunkankadai. நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம்.
(2) மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள New Moon Neon (P) Ltd., Chunkankadai. நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3031/2010/இ1)

**தீர்மானம் எண். 1369 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 11

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு பகுதியில் தண்ணீர் பிரசர் குறைவாக உள்ளதால் சாஸ்தாங்கரை பள்ளிக்கூடம் அருகிலிருந்து சிங்கன்காவு பகுதியிலுள்ள லைனுடன் இணைக்க புதிய 3" PVC லைன் போட வேண்டி உள்ளது. மேலும் சாஸ்தாங்கரை பகுதி 3" லைன் உடைவு ஏற்பட்டிருக்கும் இடங்களில் உடைவும் சரி செய்ய வேண்டியுள்ளது. மேற்காண் பணிகளை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 73,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு — மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4187/2010/இ1)

**தீர்மானம் எண். 1370 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 12

இந்நகராட்சிக்குட்பட்ட பீச் டேங்கிற்கு செல்லும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் மேலுள்ள போரில் மோட்டார் பழுதடைந்துள்ளது. மேலும் மாதாகாலனி டேங்கிற்கு செல்லும் சம்பிற்கு வருகிற பாலத்தன்கரை திருப்பில் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளது. மேலும் அலுவலக வளாகத்தில் உள்ள 7.00 லட்சம் கொள்ளளவு உள்ள டேங்கிற்கு நீரேற்றும் வி.கே.பி. பள்ளிக்கூடம் அருகிலுள்ள போரில் மோட்டார் பழுதடைந்துள்ளது. மேலும் போர் எண். 3—க்கு எதிராகவுள்ள மாதாகாலனி சம்பிற்கு செல்கின்ற நீர் ஏற்று.ம் மோட்டார் பழுதடைந்துள்ளது. மேற்காண் பழுதுகளை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 41,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு — மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4033/10/இ1)

**தீர்மானம் எண். 1371 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 13

இந்நகராட்சி அலுவலகத்தின் மேல் உள்ள குடிநீர் தொட்டி பழுதடைந்து அலுவலக கட்டிடத்தின் சுவரின் மேல் நீர் கசிந்து அலுவலக சுவர் பாதிப்படையும் நிலையில் உள்ளதால், புதிதாக 1000 லிட்டர் கொள்ளளவுள்ள HDPE Tank ஒன்று வாங்கி பொருத்துவதற்கு மன்றம் ரூ. 15,000/— க்கு அனுமதி வழங்கியது. (நகர்மன்ற தீர்மானம் எண். 1341 நாள் 28.05.2010)

அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் | 1.35% மதிப்பீட்டு தொகையை விட குறைவு. |
| 2 | திரு.பி. தங்கமணி | 6.01% மதிப்பீட்டை விட கூடுதல் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 1.35% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு — மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.1973/10/இ1)

**தீர்மானம் எண். 1372 குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகருக்கு வேலை உத்தரவு வழங்கிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 14

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011 –ம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 2.00 லட்சம் செலவில் குளச்சல் அண்ணாசிலை அருகே கலையரங்கம் அமைப்பதற்கு 23.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.பிரின்ஸ் ஒப்பந்ததாரர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.பி.ஆரோக்கியதாஸ் ஒப்பந்ததாரர் | 9.16% மதிப்பீட்டை விட கூடுதல் |

இதில் திரு.சி.பிரின்ஸ், ஒப்பந்ததாரர் 0.03% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(1) இதில் திரு.சி.பிரின்ஸ் என்பவர் 0.03% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(3) மேற்படி பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி பணியினை செயல்படுத்த கால நிர்ணயம் செய்துள்ளபடியால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1066/10/இ1)

**தீர்மானம் எண். 1373 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 15

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011 –ம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 2.50 லட்சம் செலவில் KSSS காலனியில் கழிவறை மற்றும் குடிநீர் வசதியுடன் அங்கன்வாடி மையம் கட்டுவதற்க 23.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி. ஆரோக்கியதாஸ் ஒப்பந்ததாரர் | 0.54% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.சி. பிரின்ஸ் ஒப்பந்ததாரர் | 4.35% மதிப்பீட்டை விட அதிகம் |

இதில் திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவர் 0.54% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(1) இதில் திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவர் 0.54% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(4) மேற்படி பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி பணியினை செயல்படுத்த கால நிர்ணயம் செய்துள்ளபடியால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1066/10/இ1)

**தீர்மானம் எண். 1374 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 16

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011 –ம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 5.00 லட்சம் செலவில் காமராஜர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைப்பதற்கு 23.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.ஆரோக்கியதாஸ் ஒப்பந்ததாரர் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.சி.பிரின்ஸ் ஒப்பந்ததாரர் | 7.99% மதிப்பீட்டை விட அதிகம் |

இதில் திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(1) இதில் திரு. திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(5) மேற்படி பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி பணியினை செயல்படுத்த கால நிர்ணயம் செய்துள்ளபடியால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1066/10/இ1)

**தீர்மானம் எண். 1375 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 17

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011 –ம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 2.00 லட்சம் செலவில் சைமன்காலனி பஸ் ஸ்டான்டில் பயணிகள் நிழலகம் அமைப்பதற்கு 23.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.பிரின்ஸ் ஒப்பந்ததாரர் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.பி.ஆரோக்கியதாஸ் ஒப்பந்ததாரர் | 6.21% மதிப்பீட்டை விட அதிகம் |

இதில் திரு.சி.பிரின்ஸ் எனபவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(1) இதில் திரு.சி.பிரின்ஸ் என்பவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(6) மேற்படி பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி பணியினை செயல்படுத்த கால நிர்ணயம் செய்துள்ளபடியால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1066/10/இ1)

**தீர்மானம் எண். 1376 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 18

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011 –ம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 3.00 லட்சம் செலவில் 21–வது வார்டு பண்டகசாலைபுரம் ஆசாத் தெருவில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைப்பதற்கு 23.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.பிரின்ஸ்<br>ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.பி.ஆரோக்கியதாஸ்<br>ஒப்பந்ததாரர் | 1.24% மதிப்பீட்டை விட அதிகம் |

இதில் திரு.சி.பிரின்ஸ் எனபவர் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

(1) இதில் திரு.சி.பிரின்ஸ் என்பவர் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(7) மேற்படி பணி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி பணிகளை செயல்படுத்த கால நிர்ணயம் செய்துள்ளபடியால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண்.1066/10/இ1 )

**தீர்மானம் எண். 1377 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி